87-வது க. தீ. கொ. - 2006

# அரியாலை

## 87-வது

# கூ. தீ. கொ. விழா

## 2006

**11-04-2006 செவ்வாய்க்கிழமை**
**13-04-2006 வியாழக்கிழமை**
**14-04-2006 வெள்ளிக்கிழமை**

(விய வருடப்பிறப்பன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THARRMSONS

**BUILDING CONTRACTORS,**
**BUILDING MATERIAL SUPPLIERS.**
**&**
## COMMUNICATIONS

Local : 021 - 2222790
021 - 2226272
021 - 2227391





IDD : 0094 - 21 - 2222790
0094 - 21 - 2226272
Fax : 0094 - 21 - 2222790

**Res :**
No. 9.Velappar Lane,
Off Kanagaratnam Road,
Ariyalai, Jaffna.

**Off :**
Kanagaratnam Rd. Junction,
Ariyalai, Jaffna.





- Photostat & Tourist Van Service,
- Rent for : Concrete Mixcer & Vibrator Machine.

Prop : T. THARMENTHIRAN ( Babu)





# Style Park

**171, K. K. S. Road,**
**Jaffna,**

**Perfect Collection**

ஆடை உலகில் அந்புதத் தெரிவிந்கு
யாழ்நகரில் முன்னணிக் காட்சியகம்.

# ஸ்ரைல் பார்க்

171, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 021-2228383


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# 87-வது சுதேசிய
# திருநாட் கொண்டாட்ட விழா - 2006

## சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் - நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் - வையகத்தின்
பாரிய சுதேசியத் திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் - தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று - பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் - கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் - இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே - அழகினில்
ஆழக் கழித்திடும் நாள்

கலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்தே தீந்தமிழ் - அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

ஆக்கம் : அரியாலையூர், கவிஞர் வே. ஐயாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Distributors for :

- CIC PAINT (PVT) LTD.
- OLE SPRINGS BOTTLTRS (PVT) LTD.

# E. S. PERAMPALAM & Co





General Merchants,
Commission Agent
&
Importers Dealers in Cycle Accessories.

**50, KASTHURIYAR ROAD, JAFFNA.**

**T.P. / Fax : 021-2222988**

---

# ஸ்ரீ அக்ஷா ரெக்ஸ்



*நாகரீகம் தேடும்
நங்கையர் மேனி
அழகு பெறும்
நவீன பிடவைத்
தரங்களின் சங்கமம்*

முனீஸ்வரன் வீதியில்
ஓர் ஜவுளிக் கடல்

**ஸ்ரீ அக்ஷா ரெக்ஸ்**
55, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை :
**ஸ்ரீ அபிஷேக் ரெக்ஸ்**
77, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

---

# கோபி ஆட்ஸ்

- விளம்பரப் பெயர்ப் பலகைகள் (ஸ்ரிக்கர், டிஜிட்டல், லைட்போட்)
- அலுவலக இல்லப் பெயர்ப் பலகைகள்
- வாகன இலக்கத் தகடுகள்
- கொம்பியூட்டர் ரைப்பிங்
- விளம்பர பனர்கள்
- ஸ்கிறீன் பிறிண்டிங்



**கோபி ஆட்ஸ்**
922, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை,

ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான இளைப்பாறிய

பிரதம குரு,

"பிரதிஷ்டா வித்வஜோதி", "பிரதிஷ்டா சாகரம்"

**பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்**

அவர்களின்



# ஆசியுரை

யாழ்ப்பாணத்தில் அரியாலை ஊர் மக்களால் ஒவ்வொரு வருடமும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இவ்வருடம் தனது 87-வது விழாவைக் கொண்டாடுகின்றது எனும் பொழுது மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

அக்காலம் தொடக்கம் அரியாலை மக்களால் முன்னெடுத்து நடாத்தப்படும் கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவை வளர்க்கப்படுகின்றன. அதில் சிறுவர்கள், இளைஞர்கள் மாத்திரம் பங்குபற்றுவது என்றில்லாமல் எல்லா வயதினருக்கும், இரு பாலாருக்கும் சந்தர்ப்பம் கொடுத்து அவர்களை ஊக்கவித்து மகிழ்விக்கும் முகமாக பல்வேறு போட்டி நிகழ்வுகளை நடாத்தி உற்சாகப்படுத்தி வளர்த்து வருகின்றனர்.

ஒரு மனிதனை உடல், உளத்தினால் வளப்படுத்துவது இந்தக் கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் என்றால் மிகையாகாது. இந்த வகையில் அரியாலை மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு இன்று 87-வது விழாவைக் கொண்டாடுவதற்கு எல்லாம்வல்ல விநாயகப் பெருமானதும், அம்பாளினதும் அருளைவேண்டி இவ் விழாவானது இன்னும் சிறப்புற வளர எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

- **பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ விநாயகர் தச்சுத் தொழிற்சாலை

கண்டி வீதி, அரியாலை.

(ஜெயபாரதி சனசமூக நிலைய அண்மையில்)

உரிமையாளர் : கி. கிருஷ்ணகுமார்



- சகலவிதமான வீட்டுத் தளபாடங்கள் ஒடருக்குச் செய்து கொடுத்தல்.



- குறுகிய காலத்தில் சிறந்த முறையில் வீட்டுக் கூரைகள்அமைத்தல்.

- மரங்கள் அளவுப் பிரமாணம் அரிந்து கொடுத்தல்.



மண்ணில் என்றும் மங்காத புகழ்,

நுண்வினை திறன்மிக்க எங்கள் நகைகள்



# சிறி நகையகம்

395, கண்டி வீதி,
மாம்பழம் சந்தி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் : P. கண்ணன்

077-6701343

# RAM COOL BAR



சகலவிதமான
ஐஸ்கிறீம் வகைகள்
(RIO ICE CREAM)

குளிரூட்டப்பட்ட
சோடா, பால் வகைகள்
பிஸ்கட் வகைகள்
சிற்றுண்டி வகைகள்
குளிர் பானங்கள்
தரமான மிக்ஷர், கேக்

என்பனவற்றை பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# ராம் கூல் பார்

134, புங்கன்குளம் வீதி,
(அரியாலை ச. ச. நி முன்பாக)
அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை
87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
காப்பாளர்

**திரு. செ. பத்மநாதன்** B.A.(Econ.) Dip.Re.Dcw(Israel) S.L.A.S.
அவர்களின்
(திட்டப் பணிப்பாளர், NEHRP)

# ஆசிச்செய்தி

அரியாலை மக்கள் இனத்தால் தமிழர்கள். பிறப்பால் செயற்பாட்டால் இந்துக்கள். இந்து மத பாரம்பரியங்களை மதிப்பவர்கள், பேணிக் காப்பதில் பெருமைகொள்பவர்கள். வரலாற்று ரீதியாக ஏற்பட்ட நெருக்கடிகளில் தொடர்ந்து தமது இன பண்பையும், மத சுதந்திரத்தையும் பாதுகாத்து அதில் பெருமைகொண்டவர்கள். இதன் காரணமாக ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாக தமது இன, மத செயற்பாட்டின் உச்சமாக தமிழர், இந்துக்களது புதுவருடப் பிறப்பை தமது சுதேசிய விழாவாக எண்ணி அதனைக் கொண்டாடி வருகிறார்கள். இது இன்று 86 வருட பாரம்பரியத்தை தொடர்ச்சியாகக் கொண்டு விளங்குகிறது.

சித்திரைப் புத்தாண்டை இந்துக்கள் கொண்டாடுகின்றார்கள், உலகம் முழுவதும் சிங்கள பௌத்த மக்களும் கொண்டாடுகின்றார்கள். இந்துக்களது கொண்டாட்டம் மத வழிபாட்டு கலாசாரத் தன்மை கொண்டது குடும்பத் தன்மைகொண்டது. பௌத்த சிங்களவரது கொண்டாட்டம் மதத் தன்மையும், கலாசார விளையாட்டு ஒன்றுகூடல் தன்மைகளையும் கொண்டது.

ஆனால் எமது கிராமத்தில் மாத்திரம் பூரணமான இந்துமத அனுட்டானங்களோடு மற்றைய இந்துமக்கள் கடைப்பிடிக்கும் சமூக, சமய தன்மைகளோடு, அதற்கு மேலாக பௌத்த சிங்கள மக்கள் இத் திருநாளை கொண்டாடும் மத, கலாசார, விளையாட்டு அதிலும் சுதேசிய விளையாட்டுக்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் அதே தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. இது எவ்வாறு ஏற்பட்டது ? இத் தாக்கத்திற்கான காரணம் என்ன ? எமது மூத்த தலைவர்கள் இதை எவ்வாறு நோக்கினார்கள் என்பதை ஆராயவேண்டிய நிலையில் உள்ளோம். இவ் வேற்றுமைக்குக் காரணம் யாது ? அவ் ஒற்றுமைக்கான நியாயம் என்ன ?

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எமது விழா. அரியாலை மக்களது விழா. அவ் விழா வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.

- செ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்கள் மங்கள நிகழ்வுகள் எதுவானாலும்**
**மேலும் மெருகூட்ட......**



- சொக்கட்டான் பந்தல்
- சாதாரண பந்தல்
- மணவறை வகைகள்
- பிளாஸ்ரிக், இரும்புக் கதிரைகள்
- பாய்கள்
- சமையல் பாத்திரங்கள்
- மேக்கப்
- ஐசிங்
- மணமகளுக்குரிய நகை சோடனைகள்



அனைத்து சேவையையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

**விஷ்ணுஜா பந்தல் சேவை**

2, நொத்தாரிஸ் லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

**பகலவன்**
**பலசரக்கு**
**விற்பனை நிலையம்**

620, கண்டி வீதி, அரியாலை.
(ஜெயபாரதி சனசமூக. நிலைய அண்மையில்)

குறைந்த விலையில்
தரமான பொருட்களைப்
பெற்றுக்கொள்ளலாம்

- எரி பொருட்கள்
- குளிர்பான வகைகள்

மற்றும்
பல சேவைகளைப்
பெற்றுக்பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்நகரில்
தரமான
அன்பளிப்புப் பொருட்களையும்
பரிசுப் பொருட்களையும்
விரும்பிய வகைகளில்
தெரிவுசெய்ய
ஓரே இடம்



**பெஷன் ஹவுஸ்**

203, (65) கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 2223034 - 2222197





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை
87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
காப்பாளர்

**யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்**
**பேராசிரியர் (கலாநிதி) சு. மோகனதாஸ் B.Sc. (Hons) (S.L.), Ph.D. (Adelaide.), C.Chem. அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா காலத்துக்குக் காலம் சுதேசிய உணர்வை வளர்ப்பதிலும், ஊர் மக்களிடையே ஐக்கியத்தைப் பேணுவதிலும் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. ஒரு பொதுவான கட்டமைப்பாக எமது பிரதேசம் முழுவதையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி கலை, கலாசாரம், விளையாட்டு போன்ற துறைகளில் ஒன்றாகச் செயற்படவும், தமது புலமைகளை வெளிக்காட்டவும் இச் சந்தர்ப்பம் பெரிதும் உதவுகின்றது.

நாம் எங்கிருந்தாலும் எமது ஊர்ப்பற்று அவசியமாகும். நாம் அனைவரும் எமது தகுதிக்கு ஏற்ப ஊருக்குத் தொண்டு செய்யவேண்டும். நம்மவரை உயர்த்திவிட எம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது எமது சமுதாயக் கடமையாகும். குறிப்பாக வளர்ந்துவரும் இளம் சந்ததியினர் இந்த உணர்வுடன் வாழ்ந்து உயர்வுபெற வேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

அரியாலை 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**- சு. மோகனதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை

# 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

## நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | : | திரு. செ. பத்மநாதன்<br>(திட்டப் பணிப்பாளர், NEHRP)<br>கலாநிதி, சு. மோகனதாஸ்<br>(துணை வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்) |
| தலைவர் | : | திரு. பொ. பஞ்சலிங்கம் |
| பொதுச் செயலாளர் | : | திரு. இ. சடகோபன் |
| பொருளாளர் | : | திரு. மு. தனபாலசிங்கம் |
| சிரேஷ்ட உப தலைவர் | : | திரு. ஆ. தேவராஜா |
| உப தலைவர்கள் | : | திரு. த. ஹரிஷான்ந் (கலை)<br>திரு. S. C.செல்வராஜா (விளையாட்டு) |
| உப செயலாளர் | : | திரு. R. கெசன் (கலை)<br>திரு. நி. துஷ்யந்தன் (விளையாட்டு) |
| உப பொருளாளர்கள் | : | திரு. கு. கோபிரமணன் (கலை)<br>திரு. வி. பாலரூபன் (விளையாட்டு) |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | திரு. V. K. சண்முகலிங்கம்<br>திரு. க. மயில்வாகனம்<br>திரு. N. செல்வராசா<br>திரு. சி. சிவசுந்தரம்<br>திரு. T. சிவலிங்கம்<br>திரு. K. நாகேந்திரம்<br>திரு. K. கனகசபாபதி<br>திரு. S. துரைராஜா<br>திரு. S. P. நடராஜா<br>திரு. S. குணதாஸ்<br>திருமதி ச. வில்வரட்ணம் |
| கணக்காய்வாளர் | : | திரு. N. S. சண்முகரட்ணம்<br>(பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை - 2006

## நிர்வாக உறுப்பினர்கள்



**இருப்போர் : (இடமிருந்து வலம்)**

திரு. V. K. சண்முகலிங்கம், திரு. K. கனகசபாபதி, திரு. S. P. நடராசா, திரு. இ. சடகோபன் (செயலாளர்), திரு. பொ. பஞ்சலிங்கம் (தலைவர்), திரு. மு. தனபாலசிங்கம் (பொருளாளர்), திரு. க. மயில்வாகனம், திரு. S. C. செல்வராசா (விளையாட்டுத் தலைவர்),

**நிற்போர் : (இடமிருந்து வலம்)**

திரு. N. செல்வராஜா, திரு. R. கெசன் (கலைச் செயலாளர்), திரு. கு. கோபிரமணன் (உப பொருளாளர்), திரு. நி. துஷ்யந்தன் (விளையாட்டுச் செயலாளர்), திரு. வி. பாலரூபன் (உப பொருளாளர்), திரு. S. குணதாஸ், திரு. T. சிவலிங்கம், திரு. S. துரைராசா

**படத்தில் இல்லாதோர் :**


திரு. ஆ. தேவராஜா, திரு. K. நாகேந்திரம், திரு. T. ஹரிஷாந்த் (கலைத் தலைவர்), திருமதி ச. விஸ்வரட்ணம், திரு. S. சிவசுந்தரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீனோ மர அரிவுத் தொழிலகம்

176, ஆனந்தன்வடலி வீதி,

தபாற்கட்டைச் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.



வீட்டுக்குத் தேவையான
நிலை, கதவு, யன்னல் ஆகியன
குறைந்த விலையில் சிறந்த தரத்தில்
ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

விறகு, தீராந்திகள், பலகைகள்
மற்றும் குந்திகள்
விற்பனை செய்தல்.

தனியாருடைய மரங்கள் அளவுப் பிரமாணத்தில்
அரிந்து கொடுத்தல்.

அரியாலை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வ. து.)

## கூட்டுறவுக் கிராமிய வங்கி

- சங்க உறுப்பினர்களுக்கான சேவைகள்
- மகளிர் உறுப்பினர்களுக்கான சேவைகள்
- உத்தியோகத்தர் மற்றும் உறுப்பினர் அல்லாதோர்க்கான சேவைகள்
- அரச ஓய்வூதியர்களுக்கான சேவைகள்
- இவற்றுடன் 24 மணிநேர தொலைத்தொடர்பு சேவை

மேலதிக விபரங்களுக்குச் சங்கத்தை நாடுங்கள்.

15, நடுத்தெரு லேன், அரியாலை.

உறுதியும் உத்தரவாதமும்
உள்ள 22 கரட்
தங்க, வைர நகைகளைப்
பெற்றுக்கொள்ள
யாழ்நகரில்
பிரசித்திபெற்ற
நிறுவனம்



## சாரங்கா
## நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 2222580

இணையகம் :
சாரங்கன் நகை மாடம்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 2226059





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

கௌரவ தலைவர்

## திரு. பொ. பஞ்சலிங்கம் அவர்களின்

(Royal Ceylon Air Fource Red. Non Commssion Officer)

## வாழ்த்துரை

*நாமும் எமது மக்களும் சீரும் சிறப்புமாக வாழ எம்முன்னோர் எமக்குக் காட்டிய வழிகளுக்கூடாக நாம் தொடர்ந்தும் வாழ எல்லாம்வல்ல இறைவனை முதலில் வேண்டுகின்றேன்.*

*எமது பிரதேசத்தின் சிறப்பையும், பாரம்பரியத்தையும் கட்டிக்காத்த எமது மூதாதையரின் தீர்க்க தரிசனத்தால் உருவான சுதேசிய விழாவின் 87-வது தலைவர் என்ற பெருமையை இவ்வூர் மக்கள் எனக்களித்த மைக்காக முதலில் நன்றி கூறுகின்றேன். அதனால் பெருமையடை கின்றேன்.*

*எமது பிரதேசத்தில் இலைமறை காய்களாக இருக்கின்ற இளம் வீரர்களையும், கலைஞர்களையும் மேல் நிலைக்குக் கொண்டுவருவதற் காகவும், எம்மூரிற்குப் பெருமைசேர்த்து வழிகாட்டிகளாக விளங்கும் மூத்தோரைக் கௌரவிப்பதற்காகவும், புதுவருடத்தை இன்பமாய் வரவேற்று வருடம் முழுவதும் சந்தோசமாக வாழவேண்டும் என்பதற்காகவும் கொண்டாடப்படுகின்ற இந்தத் சுதேசியத் தாய்க்கு இன்று எண்பத்தேழாவது அகவை.*

*எம்மிடையே இருக்கின்ற தீயவற்றை அகற்றி, நல்லவற்றை நேசித்து வாழவேண்டும் என்பதற்காக நமெல்லாம் ஒன்றுகூடி கொண்டாடும் அப் பெருவிழாவில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று வாழ்த்துவதோடு, 87-வது விழாச் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*எத்தனை இன்னல்கள் எம்மைச் சூழ்ந்தாலும் அரியாலைப் பிரதேசத்தின் மைந்தர்கள் என்றும் சோகமாய் வாழ்ந்தது கிடையாது. "A" முதலெழுத்து. அதுபோலவே அரியாலையின் முதலெழுத்தும் "A"தான். எனவே எல்லாவற்றிலும் நாம் முதன்மையாகத் திகழவேண்டும். எப்பொழுதும் நல்லவற்றைச் சிந்தையில் கொண்டு ஊர் சிறக்க, தேசம் சிறக்க வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.*

**- பொ. பஞ்சலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் வாழ்த்துச்செய்தி

அரியாலை வாழ் மக்களின் பாரம்பரிய விழா சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா. நாம் பிறக்கும் முன்பே எமது மூதாதையரால் கொண்டாடப்பட்டுவரும் விழா. சாதி, மத பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து எமது கிராமம், எமது மக்கள் என்ற ஒற்றுமைப்பாட்டோடு கொண்டாடப்படும் விழா. எமது கிராமத்திலே உள்ள சனசமூக நிலையங்களும் ஒருங்கிணைந்து கொண்டாடும் விழா.

பயன் பலதரும் வயல் நிலங்கள், அற்புதமான ஆலயங்கள், பசுமை நிறைந்த புல்வெளிகள், முன்னணியில் திகழும் பல பாடசாலைகள், பல தொழில் நிறுவனங்கள் மற்றும் தென்னஞ் சோலைகள் கொண்ட அழகான கிராமம் எமது அரியாலைக் கிராமம். இந்த அழகான கிராமத்திலே வாழுகின்ற அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து நந்திக் கொடியுடன் கொண்டாடும் விழா. எத்தனையோ கலைஞர்கள், கல்விமான்களை உருவாக்கிய எமது கிராமத்தின் ஒற்றுமையை பிரதிபலிக்கின்ற விழா இந்த விழா. இன்று 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இது எங்களுக்குப் பெருமையையும் பெருமகிழ்ச்சியையும் தருகிறது.

எத்தனையோ இன்னல்கள், துன்பங்கள், அழிவுகள் வந்த போதெல்லாம் மனம் தளராமல் 86 வருடங்கள் இந்த விழாவைத் தொடர்ந்து கொண்டாடியிருக்கிறார்கள் என்றால் அதற்கு மிகை ஏது. இப் பெருவிழாவின் செயலாளராக என்னை இம்முறை நியமித்தமைக்காக நான் பெருடையடைகின்றேன். இவ் விழாவைத் தொடரந்து நடத்தி எமது கிராம மக்களின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டும் என்று கூறி, அதற்கு இறைவனின் அருள்வேண்டி நிற்கிறேன்.

வாழ்க சுதேசியம்.
நன்றி.

**- இ. சடகோபன்**
பொதுச் பொருளாளர்,
87-வது சு. தி. கொ. விழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் உள்ளத்திலிருந்து......



இற்றைக்கு 87 வருட காலமாக தொடர்ந்து இவ் விழாவை அரியாலை மக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர் என்பது மிகவும் பாராட்டப்படக் கூடியதும், பெருமைப்படக் கூடியதுமான விடயமாகும். அரியாலையூரில் மிகப் பிரபல்யமாக இருந்த "பெரிய காசிப்பிள்ளையார்" என்று அன்பாக அழைக்கப்பட்ட விசுவநாதர் காசிப்பிள்ளையும், ஆறுமுகம் கதிரவேலு, ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களின் உதவியோடும் மற்றும் இங்கு வசித்த பெரியார்களுடைய ஆதரவோடும் இவ்விழா சுதேசிய உணர்வோடும், பிறந்த நாட்டுப் பற்றோடும் 1919-ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், வளர்ந்தோர் விளையாட்டுப் போட்டிகளிலும், கலைப் போட்டிகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி இலை மறை காகாகத் தங்களிடம் மறைந்து கிடக்கும் இயற்கைத் திறன்களை வெளிக்கொணர்ந்து வீர வீராங்கனைகளாக சாதனை படைக்கவும், இயல் இசை நாடகத்துறைகளில் தங்களது கலைத் திறன்களை வெளிக்காட்டி மக்களது பாராட்டைப் பெறவும் களம் அமைத்துக் கொடுக்கும் விழா சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா.

வருடா வருடம் கொண்டாடப்படும் விழா சிறப்பாகவா, எளிமையாகவா கொண்டாடுவது அதனது ஆழ, அகலம் எவ்வளவு என்பது நிதியின் அளவிலேயே தங்கியுள்ளது. இந் நிதியின் அளவானது எம்மூர் மக்கள் வழங்கும் நிதிப் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. சுதேசிய திருநாட் கொண்டாட்டம் என்பதும் எங்களை இன்முகத்துடன் வரவேற்று தங்களால் இயன்ற நிதி உதவிய்யை வழங்கியுள்ளனர். இதற்கு சுதேசிய உணர்வும் ஊர்ப்பற்றும் கொண்ட மனப்பான்மையுமே அடிப்படையாகும். நிதியுதவி தந்துதவிய எம்மூர் மக்களுக்கும், மலருக்கு விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

எவ்வித இடையூறுமின்றி இவ்விழா தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டு நூற்றாண்டுகளைக் கடந்து செல்லவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**மு. தனபாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)
பொருளாளர்,
87-வது சு. தி. கொ. விழா.

**திரு. வீ. பாலரூபன்**
**திரு. கு. கோபீரமணன்**
உப பொருளாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2006
# 87-th NATIONAL DAY CELEBRATION - 2006

**நிகழ்ச்சிகள்**

## 10-04-2006 திங்கட்கிழமை

மாலை 4-00 மணி :

**கிடுகு பின்னல்** - (பொது) (அரியாலை, கலைவாணி சனசமூக நிலைய மைதானம்)

ஆதரவு : அமரர் பொன்னையா கிருஷ்ணசாமி ஞாபகர்த்தமாக

குடும்பத்தினர், இல. 48, குகன் வீதி, அரியாலை.

## 11-04-2006 செவ்வாய்க்கிழமை

காலை 6-30 மணி : **மரதன் ஓட்டம்** - ஆண் (உள்ளூர்) 5 மைல்

ஆரம்பம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் முடிவு : அரியாலை சனசமூக நிலையம்

ஆதரவு : லக்ஷி வீடியோ மூவிஸ் (லண்டன்)

உரிமையாளர் : மகாதேவா குலதேவா, இல. 80, கனகரத்தினம் வீதி, அரியாலை.

---

காலை 9-00 மணி : (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**உதைபந்தாட்டம்** - (மாவட்டம்) இறுதியாட்டம்

ஆதரவு : **" UNIT "** திரு. உதயகுமார் -

347, கே. கே. எஸ். வீதி, மனோகரா தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம்

---

காலை 10-00 மணி : (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கிறிக்கெற்** - 16 வயதின் கீழ் (உள்ளூர்) இறுதியாட்டம்

**அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்** எதிர் **அரியாலை சனசமூக நிலையம்**

ஆதரவு : அமரர் I.S. சண்முகநாதன் ஞாபகார்த்தமாக

திருமதி. வா. சண்முகநாதன், நாவலர் வீதி, அரியாலை

---

காலை 11-00 மணி : (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கிறிக்கெற்** - திறந்த போட்டி (மாவட்டம்) இறுதியாட்டம்

**6 Star எதிர் பற்றீசியன்**

ஆதரவு : ஞானா மரத் தொழிலகம் - உரிமையாளர் : திருநாவுக்கரசு யோகராசா

377, கண்டி வீதி, அரியாலை.

---

பிற்பகல் 3-00 மணி : (அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**வலைப்பந்தாட்டம்** - (மாவட்டம்) இறுதியாட்டம்

ஆதரவு : அமரர் பொன்னையா சிவலிங்கம் ஞாபகார்த்தமாக

திருமதி. P. சிவலிங்கம், 18, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.

## 12-04-2006 புதன்கிழமை

பிற்பகல் 4-00 மணி : (அரியாலை அருணோதயா சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கரப்பந்தாட்டம்** - (மாவட்டம்) இறுதியாட்டம்

ஆதரவு : அமரர் புனிதவதி குகதாசன் ஞாபகார்த்தமாக

திரு. குகதாசன் புரந்தரன், 55, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை விழா

காலம் : **13-04-2006** (வியாழக்கிழமை) மாலை 4-00 மணி

இடம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய

"அமரர் விஸ்வநாதன் அரங்கு"

தலைமை : திரு. பொ. பஞ்சலிங்கம் அவர்கள் (விழாத் தலைவர்)

பிரதம விருந்தினர் : திருமதி சு.தெய்வேந்திரம் அவர்கள் (பிரதேச செயலர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர் : திரு. எம். மகேந்திரன் அவர்கள்
(கிராம சேவையாளர் - தலைவர், கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம்)

## நிகழ்ச்சிகள்

- மங்கள இசை : *அரியாலையூர், இ. யசோதரன் குழுவினர்.*
- மங்கள விளக்கேற்றல்.
- அகவணக்கம்.
- தேவாரம்.
- தமிழ்த்தாய் வாழ்த்து.
- பெருமைக்குரியவர்களை அழைத்து வருதல்.
- தலைமையுரை.
- ஆசியுரை : திரு. செ. பத்மநாதன் அவர்கள்
  திரு. சு. மோகனதாஸ் அவர்கள்
- கலைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல் :
  திருமதி நகுலேஸ்வரி பஞ்சலிங்கம் (விழாத் தலைவரின் பாரியார்)

(மேடையில் பரிசில்கள் பெறத்தவறுபவர்களுக்கு பரிசில்கள் மீண்டும் வழங்கப்படமாட்டாது)

- கலைப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் நிகழ்ச்சிகள் :

| | | |
|---|---|---|
| பாப்பா மலர் | : | டிலக்சிகா ரஞ்சித்குமார் (5 வய. கீழ்) |
| பேச்சு (தமிழ்) | : | க. விதுர்சிகா (கீழ்) உ. சிந்துஜா (மத்தி) சி. யாழினி (மேல்). |
| பேச்சு (ஆங்.) | : | தெ. அபிராமி (கீழ்) இ. மயூரன் (மத்தி) |
| ஒப்புவித்தல் (ஆங்.) | : | க. விதுர்சிகா - த. மதுரா (கீழ்), அ. தர்மிகா (மத்தி) |
| சங்கீதம் | : | த. மதுரா (கீழ்) தே. சுவேந்தினி (மேல்) |
| புழுகுப் போட்டி | : | திருமதி. வினோதினி ஸ்ரீமேனன் (பொது) |
| கிராமிய சம்பாஷனை | : | கமலம் அக்கா குழு (பொது) |

❖ பெருமைக்குரியவர்களை கௌரவித்தல் :

- கல்வி : திரு. கா. சவுந்தரராஜா
  உரை : திரு. S. P. நடராசா (நிர்வாகசபை உறுப்பினர்)
- சமூக சேவை : திரு. மு. விசுவநாதன்
  உரை : திரு. மு. தனபாலசிங்கம் (பொருளாளர்)
- விளையாட்டு : திரு. மு. மகாதேவா
  உரை : திரு. S. C. செல்வராசா (விளையாட்டுத் தலைவர்)
- கலை : திரு. கா. பொன்னுத்துரை
  உரை : திரு. த. ஹரிஷான்ந் (கலைத் தலைவர்)

**O/L 10A, A/L 3 A மாணவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரதம விருந்தினர் உரை :
- சிறப்பு விருந்தினர் உரை :
- நன்றி உரை : திரு. இ. சடகோபன் (செயலாளர்)
- நடனம் : ந. நிசானி (கீழ்ப்பிரிவு முதலாமிடம்)
  ந. சபீனா (மத்தியபிரிவு முதலாமிடம்)
- நாடகம் :

அரியாலை 87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பிரமாண்டமான தயாரிப்பு :

## " தலை கொடுத்த தமிழன் "

(வரலாற்று நாடகம்)

கதை வசனம் : திரு. சி. பாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்)

திரு. த. ஹரிஷான்ந் (உப தலைவர் - கலை)

திரு. R. கெசன் (உப செயளாளர் - கலை)

திரு. கு. கோபிரமணன் (உப பெருளாளர் - கலை)

## விளையாட்டு விழா

காலம் : **14-04-2006** (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2-00 மணி
(விய வருடப்பிறப்பன்று)

இடம் : அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்

தலைமை : திரு. பொ. பஞ்சலிங்கம் அவர்கள் (விழாத் தலைவர்)

*பிரதம விருந்தினர் :* திருமதி ஏ. எவ். ரூபசிங்கம் அவர்கள்
(யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுனர
தலைவர், யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்)

*சிறப்பு விருந்தினர் :* திரு. பொ. ஆராஅமுதன் அவர்கள்
(தலைவர், அருணோதயா சனசமூக நிலையம்)

### நிகழ்ச்சிகள்

- சுதேசிய தீபம் எடுத்து வருதல்.
  (ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து அரியாலை வீரர்களால்)
- சுதேசிய தீபம் ஏற்றுதல்.
- மங்கள விளக்கேற்றல்.
- சுதேசியக் கொடியேற்றுதலும், சனசமூக நிலையங்களின் கொடியேற்றுதலும்.
- சுதேசிய கீதம் இசைத்தல்.
- பிரதம விருந்தினர் அவர்கள் விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தல்.

- **100 மீற்றர் ஓட்டம்** 13, 16, 19 வயது (ஆண், பெண்)
- **50 மீற்றர் ஓட்டம்** 10 வயதின் கீழ் (ஆண், பெண்)
- **1500 மீற்றர் ஓட்டம்** பொது (ஆண்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தலையணைச் சண்டை — பொது (ஆண்கள்)
- வழுமரம் ஏறுதல் — பொது (ஆண்கள்)
- சிம்மாசன ஓட்டம் — பொது (ஆண்)
- எலி ஓட்டம் — 19 வயதின் கீழ் (ஆண் - குழு)
- உப்பு ஓட்டம் — 13 வயதின் கீழ் (இருவர் - ஆண்)
- பாலர் ஓட்டம் — 5 வயதின் கீழ் (ஆண், பெண்)
- 75 மீற்றர் வேக நடை — 50 வயதின் மேல் (ஆண்கள்)
- 50 மீற்றர் வேக நடை — 40 வயதின் மேல் (பெண்கள்)
- 4 x 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் — (கழகங்களுக்கானது)
- 4 x 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் — (உள்ளூர் அணிகளுக்கானது)
- தடை ஓட்டம் — (பொது)

## இசை அசைவுப் போட்டி

திருமணமான பெண்கள், 13 வயதின் மேல் - பெண்கள்,
13 வயதின் கீழ் - பெண்கள்

- கயிறிழுத்தல் — இளைஞர்கள் எதிர் சம்சாரிகள்.
- கயிறிழுத்தல் — யுவதிகள் எதிர் திருமணமானவர்கள்.
- வினோத ஆடைப் போட்டி — 16 வயதின் மேல், 16 வயதின் கீழ்.
- வினோத ஆடைப் போட்டி — முன்பள்ளிச் சிறார்களுக்கானது.
  [சிவசக்தி வைத்திய நிலைய ஆதரவில்]
- பொதுக்கூட்டமும், பரிசளிப்பும்.
- நன்றியுரை.
- கொடியிறக்குதல்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திரு. S. C. செல்வராசா
(உப தலைவர் - விளையாட்டு)

திரு. வி. பாலரூபன்
(உப பொருளாளர் - விளையாட்டு)

திரு. நி. துஷ்யந்தன்
(உப செயலாளர் - விளையாட்டு)

திரு. பொ. பஞ்சலிங்கம்
தலைவர்.

திரு. இ. சடகோபன்
செயலாளர்.

திரு. மு. தனபாலசிங்கம்
பொருளாளர்.

87-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாச் சபை - 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கல்வியாளர்

# திரு. காசிப்பிள்ளை - சவுந்தரராஜா



கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் அரியாலையம்பதியில் மூத்த கல்விமான்களைக் கொண்ட குடும்பத்தில் தோன்றிய சவுந்தரராஜா அவர்கள் யா/சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். மிகச் சிறிய வயதில் தாயாரை இழந்தபோதிலும் தனது இயல்பான விடா முயற்சியால் கல்வியைத் தொடர்ந்து சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சிறப்பான சித்தியைப் பெற்று, கணித விஞ்ஞானத் துறையில் உயர்கல்வியைத் தொடர்ந்து அரசாங்க உத்தியோகத்தைப் பெறவேண்டும் என பெருவிருப்புக்கொண்டு 1961ல் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் சிவில் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறியைக் கற்பதற்காக தெரிவாகி சிறந்த பெறுபேறுகளுடன் அப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் சேர்ந்து பொறியியலாளராக கடமையாற்றினார். அவரது தொடர்ச்சியான 12 வருடகால சேவையில் காங்கேசன்துறை, புத்தளம் ஆகிய பகுதியில் அமைந்த சீமேந்துக் கூட்டுத்தாபனங்கள் பெருவளர்ச்சி அடைய உதவிய பொறியியலாளர் இவர் என பலராலும் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தான் கற்ற பாடத்துறையில் மிகுந்த ஆற்றலும் ஆர்வமும் கொண்ட இவர் யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதிநேர போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். அக் காலத்தில் இவரிடம் கற்ற மாணவர்கள இன்றும் நல்ல நிலையில் இருப்பதும், இவரின் ஆற்றலைப் புகழ்வதும் இதற்குச் சிறந்த சான்றாகும்.

1976-ம் ஆண்டு காலப்பகுதியில் புத்திஜீவிகளை நாடி இலங்கைக்கு வந்த நைஜீரியாவின் வெளிவிவகார பணியாளர் தேர்வுக்குழு இவரின் ஆற்றலையும் கடின உழைப்பையும் அறிந்து இவரைக் கவர்ந்து சென்றுவிட்டது. அங்கு இவருக்கு இருக்கும் இயல்பான திறமையாலும், எமது அரியாலை மண்ணுக்கே இருக்கும் தொழிலுக்கு விசுவாசமான செயல்திறனும், அர்ப்பணிப்பு உணர்வும் இவருக்கு நல்ல பதவியுயர்வுகளையும் அந்தஸ்துக்களையும் அளித்தது. அனுபவமிக்க பொறியிலாளராக பல புதிய நிர்மானப் பணிகளை நிலைநாட்டி, 26 வருடங்கள் தொடர்ந்து வேவையாற்றி ஓய்வுபெற்ற பின் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

சொந்த ஊர்ப் பற்றுள்ள இவர் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவராவர். குறிப்பாக அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பெருமைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. 46-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா செயலாளராக பணியாற்றிய காலத்தில் புதிய கண்ணோட்டத்துடன் அவர் வகுத்த செயல் திட்டங்கள் பலராலும் பாராட்டப்பட்டது. வெளிநாட்டில் தொழிலாற்றிய காலத்தில் தமிழ் மக்களின் தொன்மை, கல்விச்சிறப்பு, கலாசாரங்களை உறுதிப்படுத்துவதிலும், விளக்குவதிலும் அரும் பங்காற்றிய கல்விமானை கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறந்த சமூக சேவையாளர்
# திரு. முருகேசு - விசுவநாதன்

அரியாலையின் சிறப்புமிக்க குடும்பத் தொகுதியின் தலைமகனாக விளங்கும் இவர் அரியாலையின் புகழையும் பெருமையையும் பேணிக் காப்பதில் மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்குகின்றார். யா/சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சிறந்த கணித ஆசிரியராவார். இவர் இலிகிதராகக் கடமையாற்றிய காலத்திலும், ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்திலும் தனது தொழிலில் தொழில்சார் வல்லுனராகத் திகழ்ந்தார். அத் துறைகளின் பாண்டித்தியம் காரணமாக இவர் பலராலும் நன்கு மதிக்கப்படுகின்றார். தனது சேவைக் காலத்தில் கண்டி, கொழும்பு போன்ற பிரதேசங்களில் கடமையாற்றிய போதெல்லாம் அப் பிரதேச மக்களுடன் இணைந்து சமூக சேவைகளைப் புரியும் மனப்பான்மை கொண்டவராக விளங்கினார். இதனால் இளைப்பாறிய நிலையிலும்கூட அப் பிரதேசத்தவர்களின் நல்ல தொடர்பு இப்பொழுதும் இவருக்குண்டு. இது இவரின் பரந்துபட்ட மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் பல பொதுத் தொண்டு தாபனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து சேவையாற்றுகின்ற பெருந்தகையாவர். யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச்சபை உறுப்பினராகவும், 19-ம் கிளைத் தலைவராகவும் பதவிவகிக்கும் இவர் அச் சங்கத்தை ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றிய் மூதாதையரின் வழித்தோன்றலாவார். இதனால் கூட்டுறவு உணர்வு, ஐக்கியம், முயற்சி என்ற உயர்ந்த பண்புகள் நிறையப்பெற்றவராக விளங்குகின்றார்.

அரியாலையின் அபிவிருத்தியில் நாட்டம்கொண்டு உழைக்கும் இச் சமூகசேவையாளர் அரியாலை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிகின்றார். மேலும் அரியாலை மத்தி சமூக அபிவிருத்திச் சபை செயலாளராகவும் நற்பணியாற்றி வருகின்றார்.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் இவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. 79-வது (1998) சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராகவும், மேலும் 85-வது (2004) சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா செயலாளராகவும், நிர்வாகசபை உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மக்களிடம் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சுதேசிய உணர்வு, ஐக்கியம், பாரம்பரிய விழுமியங்களைப் பேணுதல் பேன்றவை வளர்ச்சியடைய வேண்டுமெனபதில் பேரவாக்கொண்டு உழைத்து வருகின்றார்.

இளைப்பாறிய காலத்திலும் தனது ஆற்றல்மிக்க கணிதத்துறையிலான கல்வி நுட்பங்களை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில் விருப் புடையவராய் விளங்குகின்றார். தனது அயலில் உள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியாகக் கல்விச்சேவை செய்தவரும் இச் சமூக சேவையாளரைக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த விளையாட்டு வீரர்

# திரு. முத்தையா - மகாதேவா



அரியாலையின் சிறந்த விளையாட்டு வீரர்கள் வரிசையில் திரு. மு. மகாதேவா அவர்களும் குறிப்பிடத்தக்கவராவார். யா/சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அரியாலை சனசமூக நிலையம், அரியாலை ஐக்கிய கழகம் ஆகியவற்றின் வெற்றிக்காக உழைத்த சுதேசிய வீரராவார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் நடத்துனராகப் பணியாற்றிய இவர் சிறந்த மருதன் ஓட்ட வீரராவார். பல மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிப் பதக்கங்களைச் சுவீகரித்த வரலாறு படைத்த சாதனையாளர்.

அரியாலை ஐக்கிய கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் வலுமிக் வீரனாகவும், "கொக்கி" விளையாட்டுக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய இவர், இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வெற்றிவாகை சூடிய அணியை வழிநடாத்திய பெருமைக்குரியவராவார்.

நல்லூர் பிரதேச சபை நடாத்துகின்ற மெய்வல்லுனர் போட்டிகளில் அரியாலையின் சார்பில் பங்குகொண்டு பல புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து அரியாலைக்குப் புகழ் சேர்த்தவர்களின் வரிசையில் இவரும் ஒருவரா வார். குறிப்பாக ஒரு மைல் ஓட்டப்போட்டி, 800 யார் ஓட்டப்போட்டி போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவற்றில் சாதனை நிலைநாட்டி இருந்தமையும், பல வருடங்கள் தொடர்ச்சியாக அது நிலைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட் விழாவில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் அதன் வளர்ச்சியிலும், அரியாலை மக்களின் ஒற்றுமையிலும் அதிக அக்கறை கொண்டவராகவும் விளங்குகின்றார். பெரு விளையாட் டுக்களுடன் சுதேசிய விளையாட்டுக்களிலும் அதிக ஈடுபாடு கொண்டவரா வார். போர்த்தேங்காய் அடித்தல், சடுகுடு போன்றவற்றிலும் ஆற்றலும் அனுபவமும் மிக்கவராக விளங்குகின்றார். இவ்வாறாக மேலைத்தேய விளையாட்டுக்களுடன் சுதேசிய விளையாட்டுக்களையும் ஒன்றுசேர விளையாடுவதில் அவர் பெற்ற ஆற்றல் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

